Registered as a News Paper in Sri Lanka.

தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒவி - 01 - கதிர் - 214 14-11-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாட வேண்டிய ஒரே இடம்:

சிலரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821

நோர்வே சமாதான தூதுவரை கைது செய்ய சிஹல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப்பிர்ச்சினையை சமாதானம் செய்வதற்காக விடுதலைப் புலிகளை சந்திப்பதற்கு மீண்டும் நோர்வே நாட்டின் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்தால் அவரைக் கைதுசெய்யவேண்டும் என்று சிஹல உறுமய கட்சி அரசைக் கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு சார்பாகவும் இலங்கை மக்களுக்கு எதிராகவும் நோர்வே நடந்துகொள்கின்றது. என்றும் சிஹல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

நோர்வேயுடனான இராஜீய உறவை அரசாங்கம் துண்டித்து கொள்ளவேண்டும் என்றும் சிஹல உறுமய கேட்டிருக்கிறது.

பண்டாரவளை சம்பவத்தைத் தொடர்ந்து மலைநாட்டில் நடந்த கலவரங்களில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் இந்தக் கட்சி அரசைக் கேட்டுள்ளது.

பயங்கரவாத்துக்கு நோர்வே உதவியும், ஒத்துழைப்பும் வழங்குவதாகவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுக்கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் சிஹல உறுமய தலைவர்கள் இதைத் தெரிவித்தனர்.

சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி ஆட்சிக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்

தமிழர் விடுதலைக் கூட்டணி வற்புறுத்தல்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமூகமான தீர்வு காணப்பட வேண்டுமானால் சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையொன்றே சரியான தீர்வொன்றாக அமையுமென்றும் இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கு அமெரிக்க அரசு இலங்கையரசிற்கும் இலங்கைத் தலைவருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழுவொன்று நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டது.

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் மட்டக்களப்பு மாவட்ட எம்பி ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் இத்தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரம் பற்றி தூதுவரிடம் விபரமாக எடுத்துக் கூறிய இத்தூதுக்குழு தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்களையும் தூதுவருக்கு கூறியதாக அறியப்படுகிறது. பிந்துனுவெவ படுகொலை பற்றியும் எடுத்துச் சொன்னதாகவும் தெரியவருகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு விரைவாகக் காணப்பட வேண்டுமென்று அத் தூதுவருக்கு கூறியதாகவும் ஜக்கிய இலங்கையில் தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமானால் சுயாதிபத்திய முள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பு உருவாவதற்கு இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று தூதுக்குழு வலியுறுத்தியது.

தமிழீழக்கோரிக்கைக்கு மாற்றாக இந்த சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டுவரலாமென்றும் தூதுக்குழு தூதுவரிடம் எடுத்துச் சொன்னதாகவும் தெரியவருகிறது.

மருத்துவமனையில் இருந்து வந்த லோகநாதன் விசாரணையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எம்.பி நிமலன் மாஸ்டருடன் உதவியாக மோட்டார் சைக்கிளில் சென்று துப்பாக்கிச் சூட்டில் காயங்களுடன் உயிர்தப்பி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த செ.லோகநாதன் நேற்று மருத்துவ மனையிலிருந்து வெளியேறியதும் நாசகாரத் தடுப்புப் பொலிஸாரினால் விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப்பட்டார்.

நிமலன் மாஸ்டர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற போது அதே வாகனத்தில் நிமலன் மாஸ்ரருக்குப் பின்புறமுள்ள ஆசனத்தில் லோகநாதன் பயணம் செய்தார். கிரானில் சூட்டுச்சத்தம் கேட்டதும் துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்டதாக நிமலன் மாஸ்ரரிடம் கூறிய போது பயப்படாமல் வா என்று அவர் பதிலளித்ததாகவும் லோகநாதன் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறியிருந்தது தெரிந்ததே.

ஆஸி தூதுவர் இன்று வருகிறார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிற்கு நேற்றுக் காலை வருவதாக எதிர்பார்க்கப்பட்டிருந்த அவுஸ்ரேலியத் தூதுவர் மட்டக்களப்பில் நடந்த கடையடைப்பு ஹர்த்தால் காரணமாக வரமுடியாமல் பயணத்தை ஒத்திவைத்தார். தூதுவர் இன்று மட்டக்களப்புக்கு வந்து சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு இளைஞர்கள் விடுதலை! காணாமல் போனவர் பற்றிய முறைப்பாடுகள் தொடர்கின்றன!

(வவுனியா நிருபர்)

படையினரால் கைது செய்யப்பட்டிருந்த இரு இளைஞர்கள் நேற்று வவுனியா மனித உரிமைகள் காரியாலயத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 19 வயதுடைய தங்கவேல் ஜெயக்குமார், 14 வயதுடைய ஜீவராசா ஜீவராஜ் ஆகிய இருவரும் 10.11.2000 அன்று கைது செய்யப்பட்டு 13.11.2000 அன்று அதாவது நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அதேவேளை 09.11.2000 அன்று தொடக்கம் காணாமல் போனவர் பற்றிய முறைப்பாடுகளும் வவுனியா மனித உரிமைகள் காரியாலயத்தில் காணாமல் போனோரின் பெற்றோரால் செய்யப்பட்டுள்ளன. தாண்டிக்குளத்தைச் சேர்ந்த வேலு விமலதாசன் (17), பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சோந்த வின்சன்ற் திலீப்குமார் (15), பூவிற் 2, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த சந்திரதாசன் (15), ராமசாமி கணேஸ் (17),

(8ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் நிமலநாயகம் சௌந்தரநாயகம் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துக்களும் நடை பெறவில்லை. அலுவலங்களிலும் ஊழியர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது.

பெரும்பாலான அலுவலகங்கள் நன்பகலுடன் மூடப்பட்டது. தூர இடங்களுக்கான போக்குவரத்துக்களும் நடை பெறாததால் கொழும்புக்கான தபால் பொதிகளும் அனுப்பப்படவில்லை. என பிரதம தபால் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகம் மீண்டும் இயங்குகிறது !

(திருமலை நிருபர்)

கடந்த மாதம் 2ம் திகதி முதல் இயங்காதிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூதூர்க் கிளை நேற்று முதல் தனது வழமையான செயற்பாடுகளை ஆரம்பித்தது. மூதூர் முஸ்லிம் பொதுமக்கள், மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது இவ் அலுவலகத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இவ் அலுவலகத்தின் யன்னல்கள், கதவுகள் முதலியன பாரிய சேத்திற்குள்ளாக்கப்பட்டதோடு அலுலகமும் சேதத்திற்குள்ளாகியிருந்தது. அத்தோடு அலுகலக முன்றலில் நிறுத்தப்பட்டிருந்த 4 சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு சொந்தமான பெறுமதி மிக்க வாகனங்களும் கடுமையான சேத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தினக்கதிர்
த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055

இனியும் தாமதமேன்?

சமாதானப் பேச்சுவார்த்தை கலபமாக நடைபெறக்கூடியதல்ல: சமாதானம் ஏற்படுவதும் கலபமல்ல.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வைக் காண்பதற்கும் கடந்த சுமார் இருபது வருடங்களாக நிலவி வரும் போர்ச் சூழலுக்கு முடிவு கட்டுவதற்கும் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் நேரடியாகப் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில வருடங்களாக உள் நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் முன் வைக்கப்பட்டு வந்தது.

இதற்கு முன்னரும் பேச்சுவார்த்தை என்ற பெயரில் சில நாடகங்கள் நடந்து இடை நிறுத்தப்பட்டன.

இருதரப்பும் இதற்கு ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டி வந்தன. இப்பொழுதும் கூட விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்று அரசுத் தலைவர் முதல் பேரினவாதப் பத்திரிகைகள் வரை பிரச்சாரம் செய்து வருகின்றன.

இதனால் தான் இருதரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதானால் மூன்றாவது நாடு ஒன்று மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வற்புறுத்தினர்.

பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகித்து உதவி செய்வதற்கு பல நாடுகளும் பல வெளிநாட்டுத் தலைவர்களும் முன்வந்தனர்.

இது உள்நாட்டுப் பிரச்சினை என்றும் வெளியார் தலையீடு தேவையில்லையென்றும் ஆட்சிபீடத்தில் இருந்தவர்கள் தெரிவித்து மத்தியஸ்தர்களாக உதவ முன்வந்தவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

ஆனாலும் பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற கோரிக்கை வெளிநாடுகளிலிருந்து வற்புறுத்தல்களாக மாறியதும் இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லாமல் போனது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற முன் இரு பிரதான கூட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய கட்சியும் இனப்பிரச்சினைத் தீர்வில் தங்களுக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்று விடுதலைப் புலிகள் யோசனை தெரிவித்தனர். இந்த யோசனையை மற்றும் பலரும் ஏற்றுக்கொண்டனர். இது விஷயத்தில் இரு கட்சிகளுக்குமிடையில் உடன்பாடு ஏற்படுவதற்கு பிரிட்டிஷ் அமைச்சராக இருந்த வியாம்ஃபொக்ஸ் உதவ முன் வந்தார்.

இந்த முயற்சி நிடிக்கவில்லை. ஆனாலும் இரண்டு பெரிய கட்சிகளின் தலைவர்களும் சந்தித்து நீண்ட நாட்கள் இடையிடையே ஓய்வெடுத்துப் பேசினர். இது ஒருமித்த கருத்துடன் முடிவடையவில்லை.

தேர்தலும் வந்தது. இரு தலைவர்களும் இனப்பிரச்சினையை வைத்து ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்திப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் முடிந்ததும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக, உதவியாளராகஇரு தரப்பும் ஏற்றுக் கொண்ட நோர்வேயின் விஷேச சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெயிம் திடீரென இலங்கைக்கு வந்து வன்னிக்குப் போய் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கொழும்பு திரும்பி அரச அதிபர் சந்திரிக்காவையும் சந்தித்துச் சென்றார்.

இதைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சி மீண்டும் உயிர்பெற்றது. வழமை போலவே ஆட்சிபீடத்தைச் சேர்ந்தவர்கள் ஆன்மீகத் தலைவர்கள் தொடக்கம் பேரினவாதிகள் அரசியல் வாதிகள் வரை எதிர்ப்புக் குரல் உயர்த்தவும் தொடங்கி விட்டனர்.

இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளும் கிளம்பியிருக்கின்றன. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்து போர் நிறுத்தம் ஏற்படும். அல்லது விரைவில் ஒரு தீர்வு ஏற்பட்டு அமைதி திரும்பும் நிம்மதி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு இந்தக் காலங்கடத்தல் பெரும் ஏமாற்றத்தை அளித்து வருகிறது.

போதாக் குறைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசி அவர்களின் கருத்தையறிந்த பின்னரே விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்.

தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி மூலம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்திய சமயத்திலும் அதற்கு முன்பும் பின்பும் நடந்த பேச்சுவார்த்தை முயற்சிகளிலும் தமிழ்க்கட்சிகள் குழுக்களுடனும் பேச்சு நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியே காலம் கடத்தி எதுவும் இல்லாமல் போனது.

இதே முயற்சியை இப்போது ரணிலும் மேற்கொள்கிறாரோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. ஆனாலும் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் கட்சிகளில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஒரு கட்சியைத் தவிர இதர முன்று கட்சித் தலைவர்களும் "தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதில் எந்தப் பயனுமில்லை. விடுதலைப் புலிகளுடன் தான் பேசவேண்டும்" என்று தெளிவாகத் தெரிவித்து விட்டனர்.

இதற்குப் பின்னரும் வீணே காலம் கடத்த வேண்டியதில்லை. இதை முன்று தமிழ் கட்சிகளும் ஒரே வார்த்தையில் இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விடுதலைப்புலிகளுக்கு மட்டுமே உரிமையும் அதிகாரமும் இருக்கிறது." என்பதை உறுதியாகத் தெரிவித்து விட்டன.

இதுவே தமிழ் மக்களின் குரலுமாகும். இனியும் ஏன் தாமதம்?

மரம் அரியும் வாளினால் ஒரு இளைஞன் கழுத்தை அரிந்துள்ளனர்

பிந்துனுவெவ படுகொலைகள் பற்றி வெளியாகும் அதிர்ச்சி தரும் உண்மைத் தகவல்கள்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகளில் பெண்களும் பெருமளவில் பங்குகொண்டனர் என சம்பவத்தின்போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞர்கள் தனக்குத் தெரிவித்ததாக மனித உரிமைகள் குழுவின் **(Human Rights commitee of the Bar Association)** தலைவரான டெஸ்மன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிந்துனுவெவ படுகொலைகள் நடைபெற்ற காலம் முதல் நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்துப் பல திடுக்கிடும் தகவல்களை இவர் முன்பும் பல சுடவைகளில் வெளியிட்டிருந்தார்.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக டெஸ்மன் பெர்னாண்டோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி, மனித உரிமைகள் குழுத் தலைவர் கேஎஸ் இரத்தினவேல் ஆகியோர் தெரிவித்துள்ள பல கருத்துக்கள் நாகரிகமடைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் மனித சமுகமொன்றால் இவை செய்யப்பட்டுள்ளனவா? என்ற கேள்வியையே எழுப்புகின்றது. இது காட்டுமிராண்டித்தனத்திற்கும் அதிகமான, மனிதகுல வரலாறு காணாத ஓர் கொடூரம்.

மரம் அரியும் வாளால் தலை அரியப்பட்டது.

டெஸ்மண்ட் பெர்னாண்டோ அங்கு மேலும் பேசுகையில் இந்தப் படுகொலைகளைப் புரிவதற்கு மரம் அரிவதற்குப் பயன்படுத்தப்படும் பாரிய இயந்திர வாள் ஒன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த வாள் மூலம் அங்கிருந்த இளைஞர் ஒருவரின் கழுத்து அரியப்பட்டு தலையற்ற வெறும் முண்டம் அங்கு காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரி, இந்தக் கொடூரக் கொலைகளுக்கெல்லாம் காரணம் தான் என்ன?

குறிப்பிட்ட இந்த முகாமுக்கு படுகொலைகள் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் அழைத்து வரப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் அங்கிருந்த இளைஞர்களை கலகம் செய்யத் தூண்டியதாகவும், பொலிஸாரை அடித்து விரட்டி விட்டு முகாம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக இளைஞர்கள் அறிவித்ததாகவும், அதே வேளை முகாமைச் சூழ்ந்த கிராம வாசிகளையும் இந்த இளைஞர்கள் தாக்கியதாகவும், அதனாலேயே மக்கள் கிளர்ந்தெழுந்து இந்தப் படுகொலைகளைப் புரிந்ததாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் சார்பில் அழகாக ஒரு கதை சோடிக்கப்பட்டு அரச ஊடகங்களுக்கு பரப்பப்பட்டது.

ஆனால் மனித உரிமைகள் குழுவின் கருத்துக்களோ இக்கூற்றின் பொய்மைத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இந்தப் படுகொலைகள் நடைபெறுவதற்கு முதல்நாள், தமக்கு வந்த சில தீபாவளி வாழ்த்து மடல்கள் கிழித்து குப்பைக் கூடைக்குள் போடப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற ஓர் இளைஞன் இது தொடர்பாக அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கான காரணத்தைக் கூறும்படி அவ்விளைஞர் அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

ஏலவே அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்கு வந்த கடிதங்கள் எவையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தொலைபேசி அழைப்புக்களைக்கூட வழங்க மறுத்துவிட்டனர். இதனாலேயே அங்கு இளைஞர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது.

நம்பமுடியாத கட்டுக்கதை

ஆனால் அரச தரப்பு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டதுபோல இளைஞர்கள் பொலிசாரைத் தாக்கியிருக்க வந்த வாய்ப்பும் இல்லை. ஏனெனில் முகாமில் ஏறத்தாள 60 பொலிசார் கடமையிலிருந்துள்ளனர். 60 பொலிஸாரையும் இளைஞர்கள் தாக்கி விரட்டினர் என்பது நம்ப முடியாத ஒரு கட்டுக்கதையே.

மேலும் சமபவம் நடைபெறுவதற்கு முதல்நாள் இரவு பிந்துனுவெவ முகாமுக்கு அலுப்பிட்டிய இராணுவப் பிரிவு ஒன்றும் அங்கு நிலைமைகள் கட்டுப்பாட்டிலிருப்பதாகக் கூறி பொலிசார் திருப்பி அனுப்பியுள்ளனர். இத்தகவலை ஓர் இராணுவ உயரதிகாரி கொழும்பில் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

"இராணுவம் 25ம் திகதி அதிகாலை 1 மணியளவில் தியதலாவை முகாமுக்குத் திரும்பியது. மீண்டும் நாம் அங்கு சென்றபோது அங்கு எல்லாமே நடந்தேறி விட்டது." என்கிறார் அந்த இராணுவ உயரதிகாரி.

இவை தவிர, பிந்துனுவெவ முகாமை நேரில் சென்று பார்வையிட்ட மனித உரிமைகள் குழுவினர், இந்த முகாமுள் நுழைவதற்கு முன்வாசல் தவிர வேறெந்த வழிகளும் இல்லை. முன் வாசலிலோ அடித்து உடைக்கப்பட்டதற்கான எதுவித தடயங்களும் இல்லை எனத் தெரி வித்துள்ளனர்.

பொலிஸாரா காடையரா செய்தனர்

எனவே இந்தப் படுகொலைகளை ஒன்றில் பொலிஸாரே செய்திருக்க வேண்டும். அன்றில் பொலிசாரின் அனுசரணையுடன் காடையர்கள் உள்ளே புகுந்து கொலை வெறி ஆடியிருக்க வேண்டும்.

மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைக் கொண்டு நோக்குமிடத்து இவை இரண்டுமே நடந்துள்ளமைக்கான சாட்சியங்கள் தெரிகின்றன.

கொல்லப்பட்ட இளைஞர்களது உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்துள்ளன. முகாமில் பொலிஸாரைத் தவிர வேறு எவரிடமும் துப்பாக்கிகள் இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே இந்தப் படுகொலைகளில் பொலிஸாரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது தெளிவு.

இதே சமயம், இந்தப் படுகொலைகள் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் முகாம் அமைந்துள்ள பகுதியில் பரவலான சுவரொட்டிப் பிரச்சாரம் நடைபெற்றுள்ளதாகவும், இச்சுவரொட்டிகளில் இனவாதத்தைத் தூண்டி கிராம மக்களை தூண்டிவிடும் வாசகங்கள் காணப்பட்டதாகவும் மனித உரிமைகள் குழுத்தலைவர் இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

மேலும், முதல்நாள் இரவு ஒரு ஜீப்பில் முகாமிற்குப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரும் சில பொலிஸாரும் வந்ததாகவும், பொறுப்பதிகாரி முகாமுக்குள் செல்ல உடன் வந்த பொலிஸார்களும் வேறு இனம் தெரியாத நபர்களும் அருகிலிருந்த வீடுகளுக்குச் சென்று "முகாமிலுள்ள புலிகள் உங்களைத் தாக்கப் போகிறார்கள். நீங்கள் இன்னும் ஏன் காத்திருக்கிறீர்கள்?" என வினாவியுள்ளனர் எனவும் தனக்குத் தகவல் கிடைத்தாக இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

முகாமில் இருந்த இளைஞர்களுக்கும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பொதுவாக நல்லுறவு நிலவி வந்ததாகவும் அவர்களுக்கிடையே முரண்பாடு எதுவும் இருக்கவில்லை எனவும் இம் மனித உரிமைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

திட்டமிட்ட சில சக்திகள் வேண்டுமென்றே வெறும் வதந்தி அச்சுறுத்தல்களை கிராம மக்கள் மத்தியில் பரப்பி அவர்களையும் இப்படுகொலைகளில் ஈடுபடத் தூண்டியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

இது தவிரவும், வேறு பகுதிகளிலிருந்தும் வான்களில் சில காடையர்கள் வந்து படுகொலைகளில் பங்கெடுத்துள்ளனர் என்பதையும் மனித உரிமைகள் குழுவினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே இந்தத் தகவல்களையெல்லாம் சேர்த்து நோக்கும் போது பிந்துனுவெவ படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. மேலும், இப்படு கொலைகள் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் முகாம் சுற்று வட்டாரத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், பாராளுமன்றத் தேர்தலில் பொ.ஐ.முன்னணிப் பிரச்சாரத்துக்காக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் பின்புறத்தில் எழுதப்பட்டவை என்பதையும் விநாயகமூர்த்தி (பா.உ) தெரியப் படுத்தினார்.

இந்தத் தகவலானது இப் படுகொலைகளின் பின்னணியை தெளிவாக இனங்காட்டுகிறது. எனவே இப்படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டு, எத்தகைய ஓர் பின்னணியுடன் செய்யப்பட்டுள்ளன என்பதை இனி விசாரணை மூலம் கண்டறிய வேண்டிய தேவை இல்லை.

இருந்தும், இப்படு கொலைகள் நடந்தேறி 3 வாரங்களாகின்ற நிலைமையிலும் இது

(4ம் பக்கம் பார்க்க)

வீரப்பன் அழைப்புக்காக தாளவாடியில் காத்திருக்கும் நெடுமாறன் குழுவினர்

(சத்தி. நவ.13)

கன்னட நடிகர் ராஜ்குமார், சினிமா டைரக்டர் நாகேஷ் ஆகியோர் 107 நாட்களாக சத்தி காட்டுப் பகுதியில் வீரப்பன் மற்றும் தமிழ் தீவிரவாதிகள் பிடியில் சிக்கி உள்ளனர்.

இவர்களை மீட்கும் நடவடிக்கையாக அரசு நெடுமாறன் தலைமையில் தூதுக்குழுவை அனுப்பி வைத்தது. இந்த குழுவினர் கடந்தமுறை சென்ற போது ராஜ்குமாரின் மருமகன் கோவிந்த ராஜனை மீட்டு வந்தனர். அப்போது 121 தடா கைதிகள், 5தமிழ் தீவிரவாதிகளை விடுதலை செய்தால் தான் ராஜ்குமார் மற்றும் நாகேசை விடுவிப்போம் என்று வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் கூறி விட்டனர். ஆனால் சுப்ரீம் கோர்ட்டு கைதிகளை விடுவிக்க மறுத்து விட்டது.

மீண்டும் பயணம்

இந்த நிலையில் தமிழக சட்ட சபையில் எதிர்கட்சி தலைவர் கோபாலகிருஷ்ணன் பேசும்போது, நெடுமாறன் தேச விரோத சக்தி, அவரை கைது செய்ய வேண்டும் என்று கூறினார். இதன் காரணமாக ராஜ்குமார் மீட்பு நடவடிக்கையில் இருந்து விலகிய நெடுமாறன் பின்னர் ராஜ்குமார் மகன்கள், அரசியல் கட்சி தலைவர்கள் வற்புறுத்தல்களுக்கு பிறகு மீண்டும் காட்டுக்கு போக சம்மதித்தார்.

நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி புதுவை சுகுமாறன் ஆகிய 3 பேரும் சென்னையில் இருந்து காரில் புறப்பட்டு சுத்தி வந்தனர்.

திம்பம் பகுதியில்

வீரப்பன் கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் நாகேசை தாளவாடி மலைப்பகுதி தாமரைக்குட்டை பகுதியில் இருந்து 7 கி.மீ தூரத்தில் உள்ள தேர்பிதா என்ற இடத்தில் கடந்த 10 நாட்களாக வைத்திருந்ததாக தெரிகிறது. ஆதலால் நெடுமாறன் குழுவினர் தாளவாடியில் உள்ள திம்பம் மலைப்பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

இவர்களின் வருகை குறித்த தகவல் தூதர் வீரப்பனிடம் எடுத்து செல்லப்பட்டு உள்ளது. வீரப்பன் அழைப்புக்காக நெடுமாறன் குழுவினர் காத்து இருக்கிறார்கள். வீரப்பன் ஆட்கள் நெடுமாறனை, இன்று அவனிடம் அழைத்து செல்லலாம் என்று அந்த பகுதியில் முகாமிட்டுள்ள உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த முறை எப்படியும் ராஜ்குமார் மீட்கப்பட்டு விடுவார் என்றும் அவர்கள் உறுதிபட கூறுகிறார்கள்.

தமிழ் நாட்டில் உ சிலம்பட்டியில் ஒரு பள்ளிக்கு பாம்புகளுடன் ஆசிரியர் வந்து பரபரப்பூட்டிய காட்சி

''பலஸ்தீனியருக்கு ஆதரவை செயலில் காட்ட வேண்டும்''

(ரியாத்)

உலகிலுள்ள 120 கோடி முஸ்லிம்களின் தலைவர்கள் பலஸ்தீனியருக்கான ஆதரவை வாய் மொழிமூலம் கூறாமல் செயலில் காட்ட வேண்டும் என்று சவூதி அரேபியா கூறியுள்ளது.

56 அங்கத்துவ நாடுகளை கொண்ட இஸ்லாமிய மாநாட்டின் உச்சி மாநாட்டிலேயே சவூதி அரேபியா இவ்வாறு கூறியுள்ளது.

மத்திய கிழக்கு சமாதான பேச்சின் தோல்விக்கு அமெரிக்கவே பொறுப்பேற்க வேண்டும் என்று சவூதி அரேபிய இளவரசர் அப்துல்லா மாநாட்டில் கூறியுள்ளார்.

கட்டாரைப் போன்று மத்திய இஸ்லாமிய அமைப்பின் அங்கத்துவ நாடுகளும் இஸ்ரேலுடனான உறவை துண்டித்து விட வேண்டும் அல்லது உண்மையான சமாதானம் ஏற்படும் வரை உறவை இடை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

உலகப்போரில் உளவாளியாக செயல்பட்ட நாட்டியக்காரி

இரண்டாவது உலகப்போரின் போது அமெரிக்க மற்றும் இங்கிலாந்து படைகளின் நடமாட்டத்தை வேவு பார்த்து சொல்ல ஒரு நடனக்காரியை ஜெர்மனியில் நாஜிபடை பயன்படுத்தி இருக்கிறது.

கியூபா நாட்டை சேர்ந்த அவள் பெயர் விவியான். அவளது கணவனும் ஒரு நடன கலைஞர். இவர்களுக்கு நாஜி படை உளவு பயிற்சி அளித்து இருக்கிறது. பிறகு அவர்கள் நடன கலைஞர்கள் என்ற பேரில் இங்கிலாந்து உள்ளி ஐரோப்பிய நாடுகளில் கலைநிகழ்ச்சி நடத்த சென்று உள்ளனர். இங்கிலாந்து டெலிவிஷனில் கூட தோன்றி இருக்கிறார்கள்.

அமெரிக்க மற்றும் இங்கிலாந்து போர்க்கப்பல்கள் மற்றும் முக்கிய படைப்பிரிவுகளின் நடமாட்டத்தை கண்காணித்து அதை நாஜி படைகளுக்கு தெரிவிக்க வேண்டியதுதான் இவர்களது வேலை. கண்ணுக்கு தெரியாத மையை கொண்டு தகவல் எழுதும் ரகசிய முறை இவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டு உள்ளது. இங்கிலாந்து ராணுவம் தனக்கு கிடைத்த ஒரு தகவலை கொண்டு இந்த 2 பேரையும் கைது செய்து விட்டது.

மேற்கண்ட தகவல் இங்கிலாந்து ராணுவத்தின் எம்15 உளவு பிரிவின் ஆவணங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

எல்லையில் பாகிஸ்தான் படை குவிப்பு கவலை இல்லை என்கிறது இந்தியா

(காந்திநகர்)

கட்ச் எல்லைப்பகுதியில் போதுமான அளவில் நமது பாதுகாப்பு படை உள்ளது. இங்கிருந்து 70 கிலோ மீற்றர் தூரத்தில் பாக்கிஸ்தான் படை குவிக்கப்பட்டு இருந்தாலும் நமக்கு கவலையில்லை. என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கூறினார்.

இதுகுறித்து நிருபர் களிடம் அவர் கூறியதாவது:-

கட்ச் எல்லைப்பகுதியில் பாக்கிஸ்தான் ராணுவத்தின் ஏழு கம்பனியை குவிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. இதைபாக்கிஸ்தான் மறுத்துள்ளது.பாகிஸ்தான் ராணுவத்தின் சில பிரிவு கட்ச் எல்லைப்பகுதியில் இருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் குவிக்கப்பட்டுள்ளன. இது வழக்கமான நடவடிக்கை தான்.இதனால் கவலைப்படுவதற்கு இல்லை. இங்கு நமது படை போதுமான அளவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றது.

பாதுகாப்பு பணிகளுக்காக "டையூ" விமான தளத்தை விரிவு படுத்துவதில் பிரச்சினைகள் எழுந்துள்ளது துரதிஷ்டவசமானது இந்த விமான தளத்தை விரிவுப்படுத்துவது முக்கியமானது. ஆனால் உள்ளூர் அரசியல் தலைவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

இரண்டுமுன்று ஆண்டுகளுக்கு முன் பாதுகாப் புத்துறைக்கு போதுமான நிதி வசதி இல்லை. ஆனால், விமானப் படையை மேம்படுத்துவதற்கு தற்போது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.ரஷ்ய அதிபர் புடின், பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் சமீபத்தில் இந்தியா வந்து இருந்த போது, சுகோய்,மிராஜ்-2000 வாங்குவதற்கு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இவ்வாறு ஜார்ஜ் பெர்னாண்டல் கூறினார்.

ஈராக்குடன் ஒத்துழைக்க குவைத் விதிக்கும் நிபந்தனை

குவைத் அதன் முன்னாள் ஆக்கிரமிப்பாளரான ஈராக்குடன் ஒத்துப் போகும் யோசனையை நிராகரித்துள்ளது. அவ்வாறு ஒத்துப் போகும் யோசனையை கருத்தில் எடுப்பதற்கு முன் 1990ம் ஆண்டு இடம்பெற்ற ஆக்கிரமிப்புக்கு ஈராக் மன்னிப்பு கேட்டுக் கொள்வதுடன் மற்றும் பல நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று குவைத் கூறியுள்ளது.

கட்டாரில் ஆரம்பமாகியுள்ள இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு உச்சி மாநாட்டில் இவ்வாறான ஒரு யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக கூறப்பட்டபோது யுத்தத்தின் போது சிறைப்பிடிக்கப்பட்ட குவைத் பிரஜைகள் விடுதலை செய்யப்பட்டு ஐக்கிய நாட்டு பாதுகாப்பு பேரவையின் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் குவைத் மக்களிடம் மன்னிப்பு கேட்கப்பட்டால் அன்றி ஈராக்கியருடன் சேர்ந்து உச்சிமாநாட்டில் அமரப் போவதில்லை என குவைத் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது குண்டு வீச்சு 4 பள்ளிச் சிறுவர்கள் காயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத் மீது அமெரிக்க, இங்கிலாந்து போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 4 பள்ளிச் சிறுவர்கள் உள்ளிட்ட 7 பேர் காயமடைந்ததாக ஈராக் கூறியுள்ளது.

காயமடைந்தவர்களில் 3 பேர் ஆசிரியர்கள். 1991ம் ஆண்டு நடந்த வளைகுடாப் போருக்குப் பிறகு ஈராக் மீது பல தடைகளை ஐ.நா.சபை விதித்தது.அதில் ஒன்று சில பகுதிகள் மீது விமானங்கள் பறக்கக் கூடாது என்பது அந்தப் பகுதிகளை அமெரிக்கா, இங்கிலாந்து தலைமையிலான மேற்கத்திய நாடுகளின் படைகள் கண்காணித்து வருகின்றன.

இந்த நிலையில் தெற்குப் பகுதியில் உள்ள பஸ்ரா மாகாணத்தில், ஹுமாய்தி கிராமம் மீது சனிக்கிழமை பிற்பகல் அமெரிக்க இங்கிலாந்து போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதாக ஈராக் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மொத்தம் நான்கு ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அது தெரிவிக்கிறது.

இந்தத் தாக்குதலில் 3 ஆசிரியர்கள், 4 மாணவர்கள் காயமுற்றனர்.மேலும்,பல வீடுகள், கட்டடங்கள், ஒரு கார் ஆகியவை சேதமுற்றதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

12 பேருடன் இந்திய ஹெலி காணவில்லை

(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான குஜராத் எல்லையில் 12 பேருடன் காணாமல் போன இந்திய ஹெலிகாப்டரை இந்திய விமானப்படையினர் தேடி வருகின்றனர்.

கொட்டேஸ்வர் என்ற குஜராத் நகரிலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட இந்த ஹெலிகாப்டர் சில நிமிடங்களிலேயே காணாமல் போய் விட்டதாக விமானப் படைப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். எல்லைப் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 8 அதிகாரிகளும் 4 விமனப்படை விமானிகளும் இதிலிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்துடனான பாகிஸ்தான் எல்லையில் இந்த ஹெலிக்காப்டர் காணாமல் போயுள்ளது. நேற்று குஜராத் பகுதிக்கு சென்றிருந்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெனாண்டோ, பாகிஸ்தான் இந்திய எல்லையில் தனது துருப்புகளை அதிகரித்துள்ளது என்று குறை கூறியுள்ளார்.

ஜப்பான் கடலில் அமெரிக்க விமானங்கள் மோதி விபத்து

(டோக்கியோ)

அமெரிக்காவின் எம்.16 ரக போர் விமானங்கள் இரண்டு ஜப்பானிய கடல் பகுதியில் இராணுவ பயிற்சியின் போது ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதை அடுத்து ஒரு விமானி பலியாற்றப்பட்டார். அதே நேரம் மற்றைய விமானி காணாமல் போயுள்ளார். ஜப்பானின் தென்பகுதியான கிடோக்குக்கு அப்பால் இந்த விபத்து இடம்பெற்றது. அமெரிக்காவும் ஜப்பானும் கடந்த இரண்டாம் திகதி முதல் இராணுவ பயிற்சியை இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இந்த 17 நாள் பயிற்சியில் 21 ஆயிரம் வீரர்களும் 31.ஜெட் விமானங்களும் பங்குபெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஓகஸ்ட்டில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி ஜப்பானிய பிராந்தியத்தில் அவசர நடவடிக்கை தேவைப்படும் நிலையில் அமெரிக்க இராணுவத்தினருக்கு ஜப்பான் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கு சீனாவும் வடகொரியாவும் எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டுப்படுத்த கஷ்டப்பட்ட கலை நிகழ்ச்சி

(கல்கத்தா)

ஹொலிவூட்டின் இளம் திரைப்பட நடிகர் கெரித்திரி ரொஷானின் கலை நிகழ்ச்சி ஒன்று சனிக்கிழமை கல்கத்தா சோல்த் திலத் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை கண்டு களிக்க சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேர் கூடினர். இவர்களை கட்டுப்படுத்த பொலிஸாரால் முடியாமல் போனது. இளம் நடிகர் ஒருவரின் முதலாவது கலை நிகழ்ச்சி இது.

இந்நிகழ்ச்சியில் கிடைக்கும் நிதி அண்மையில் மேற்கு வங்களாதேசத்தில் ஏற்பட்ட வெள்ள பெருக்கில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என ரொசான் தெரிவித்தார்.

கடந்த 10 வருட காலமாக இயங்காமல் இருந்து வந்த "பெரியநீலாவணை மத்திய மருந்தகம்" மருதமுனை குளோபல் இஸ்லாமிக் சேர்வீஸ் அமைப்பினால் சென்றவாரம் மீண்டும் திறக்கப்பட்டது. வைத்தியசாலையின் டாக்டர் உவைசுல் பாரி நாடா வெட்டித் திறந்து வைப்பதையும், இவ்வைபவத்தினையொட்டி இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சட்டத்தரணி ஏ.எம்.பதுறுதீன் உரையாற்றுவதையும், வைத்திய அதிகாரி நோயாளி ஒருவரினைப் பரிசோதிப்பதையும் படங்களில் காணலாம்.

(படம்:- கல்முனை மத்திய நிருபர் - ஜெஸ்மி)

பிறந்த திகதி தரும்யோகம்.

ஜோதிடம் ஆகஸ்ட- 03

ஆகஸ்ட் மாதம் 3.12.21.30 ம் திகதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்.

எண் 3 அதன் அதிபதி குரு.

ஆகஸ்ட் 3.12 ல் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கத்தையும், 21.30ல் பிறந்தவர்கள் சூரியனின் ஆதிக்கத்தையும் பெற்றவர்கள்.

எண்ணுங்களும் உயர் வானவே சொல்லாடும் பெரியதே.

அதேபோல் வெற்றியும் பெரிதாகவே அமையவேண்டும் என்று எதிர் பார்ப்பார்கள். சிறு சிறு வெற்றிகளில் திருப்தியே இருக்காது. நிறைய நண்பர்களும் அமைவார்கள். கற்தலில் வெற்றியை விட தோல்வியே அதிகமாக இருக்கும். தோல்வியால் மனமும் பாதிக்கப்படும்.

அதிக அக்கறையுடன் தீவிர முயற்சியுடன் செயலாற்றுவதால் தாங்களே எதிலும் முதன்மையாக இருப்பீர்கள். அரசு உத்தியோகம் அமையும். உயர் பதவியில் அமரும் தகுதி பெறுவீர்கள். அரசியல் ஈடுபாடு அதிகமாக இருக்கும். அரசியலில் தலைமை வகித்து நடத்திச் செல்லும் தகுதி உடையவர்களே. மக்களின் பிரதிநிதியாக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக பணியாற்றும் தகுதியுடையவர்கள். புகழ்ச்சிக்கும் மயங்காதவர்கள். அனைவரிற்கு அடிபணிபவர்கள். இயற்கையின் அழகை ரசிப்பவர்கள். குடும்பத்தில் பாசம் மிக்கவர்கள். குழந்தைகளைக் கொஞ்சி விளையாடுவதில் மாறாத அன்பும், அவர்கள் மேல் பாசமும் கொண்டவர்கள்.

உச்சமான வாழ்க்கை வாழ்வீர்கள். ஆனால் அதிலும் திருப்தி வராது. மேலும் மேலும் உயரவேண்டும் என்றே முயற்சி செய்வீர்கள். ஆனால் அது அடுத்திலேயே கொண்டு செல்லும். ஆசைக்கும் ஓர் அளவு உண்டு தானே பேராசையைக் குறைத்துக் கொண்டால், உயர்வான வாழ்க்கை என்றும் நிலையானதாக அமையும்.

எதில் முதலீடு செய்தாலும் அதில் அதிக லாபம் பெறும் யோகமுள்ளவர்கள். செல்வ நிலையிலும் எதிர்பாராத சில அதிஷ்டங்களைப் பெறுவீர்கள். செல்வநிலையிலும் மிகவும் உயர் நிலை அடைவீர்கள். பெரிய தொழிற்சாலைகள், கம்பெனிகள் இவைகளால் பெருத்த இலாபம் பெறுவீர்கள்.

நல்ல உடல் நலம் உடையவர்கள். உயர்வான உணவையே உண்ணும் யோகம் பெற்றவர்கள். அதில் கொழுப்பு அதிகமாக அமைவதால் உயர் இரத்த அழுத்தம், இருதயநோய், வரும். அதனால் அசைவ உணவையும், கொழுப்புச் சத்தையும் குறைப்பதால் பிற்காலத்தில் வரும் நோய்களைத் தவிர்க்கலாம்.

1-3-4-10-12-13-19-21-22-28-30-31 ம் தேதிகளில் வந்த ஆண்டு வந்த மாதமானாலும் யோகம் தரும்.

1-3-10-12-19-21-28-30-37-39-46-48-55-57-64-66 ம் வயதுகளில் உங்களது வாழ்க்கையில் சுப நிகழ்ச்சிகள் பல நடைபெறும்.

கூட்டு எண் 1-3-4 ஆக வரும் நண்பர்களுடன் நட்பு என்றும் நிலையானதாக அமையும். வாழ்க்கைத் துணைவரின் எண்ணும் இதே கூட்டு எண்ணாக அமையுமானால் இல்லற வாழ்க்கை இனிமையானதாய் அமையும்.

வர்ணம்:- ஒரேஞ்ச், ரோஸ் முதலிய எல்லா செந்நிறங்களும் நன்மை தரும். தாமரைப்பூவின் வர்ணம் மிக்க அதிஷ்டமானதாகும். கத்தரிப்பூ வர்ணம், மஞ்சள், சிகப்பு நிறங்களும் நன்மையே.

இரத்தினம்:- இவர்களுக்கு மிக நன்மைகளைத் தந்து மன அமைதியையும் சற்குண விருத்தியையும் தரவல்லது. எமிதிஸ்ட் (AMETHIST) ஆகும். கத்தரிப்பூ நிறங்கொண்ட இக்கல் செவ்வாய்க்கிழமை என்றும் குறிக்கப்படுகிறது.

புஸ்பராகம்:- TOPAZ AND YELLOW SAPPHIRE நன்மையளிக்கக் கூடியதே.

வே.தவராசா.

ஓய்வூதியப் பணம்

(மூதூர்)

ஓய்வூதியப் பணத்தை தவறவிட்ட கைப்பெண் பரிதாப நிலைக்குள்ளானார். நேற்று முன் தினம் மூதூர் தபாலகத்தில் ஓய்வூதியம் வழங்கும் போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தவற விடப்பட்ட பணம் ரூபா 4500 ஐயும் எடுத்துச் சென்று தேடிப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போகவே வெறுங்கையுடன் திரும்பினார் அந்த ஓய்வூதியப்பெண்.

அநாதைப் பிள்ளைகளுக்கு உதவிப் பணம் வழங்கல்

(றூமி)

இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய தமது பிள்ளைகளை வளர்த்து மிளிர வைப்பது ஒவ்வொரு பெற்றோரின் மீதுள்ள கட்டாயக் கடமையாகும். அப்போதுதான் சிறந்ததொரு சமாதானமான உலகினை நோக்கி தம்மால் பயணிக்க முடியும்.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் அன்சாரிஸ் சுன்னாவில் முஹம்மதிய்யா இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.கலீலுர்ரஹ்மான் தெரிவித்தார்.

ஏறாவூர் மட்/அறபா வித்தியாலயத்தில் நடை பெற்ற அநாதைப் பிள்ளைகளுக்கான உதவிப் பணம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாங்கள் வழங்கும் இவ்வுதவித் தொகையினைக் கொண்டு கல்வியிலும், ஏனைய துறைகளிலும் தங்களை வளர்த்துக்கொண்டு இஸ்லாத்தின் பிடியில் நின்று தவறாதவர்களாக எல்லோரும் தங்களது பழக்க வழக்கங்களை சிறுவயதிலிருந்தே அமைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் வரவேற்புக் குழுவின் தலைவர் பரீட் (மௌலவி) செயலாளர் எம்.எம். மௌஜூத் (ஆசிரியர்) ஆகியோர்களும் ஊர் பெற்றார்களும், அநாதைச் சிறார்களும் கலந்து கொண்டார்கள்.

இதன் போது 30 அநாதை சிறார்களுக்கு ரூபா 4000 வீதமும், 4 அநாதைச் சிறார்களுக்கு ரூபா 8000 வீதமும், ஒருவருக்கு ரூபா 12000 என்ற வீதியில் மொத்தமாக 1,64,000 பணம் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கான உடுப்புப் பார்சல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

புதிய கிராம உத்தியோகத்தர்

(மண்முனைப்பற்று நிருபர்)

மண்முனைப் பற்று பிரதேச பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தின் 151 பிரிவிற்கென ஒரு புதிய கிராம சேவகர் கடமையாற்ற உள்ளார். இதற்கு முன்பு கடமையாற்றிய பொன்சின்னப்பா கிராமசேவகர் ஓய்வு பெற இதற்கு பதிலாகவே இப்புதிய கிராம சேவகரான பொன்.கதிர்காமநாதன் கடமையாற்றவுள்ளார்.

மரம் அரியும் .....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான நீதியான விசாரணைகள் எதுவும் செய்யப்படவில்லை.

மாறாக இப் படுகொலைகளை எதிர்த்து மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட எதிர்ப்புணர்வுகளை உடனடியாகக் கட்டுப்படுத்தி வேறாரு திசையிலேயே அரசு முழுக் கவனத்தையும் செலுத்தியது.

மலையகத்தில் ஓர் பதட்ட நிலையினை தன்னுடைய பாதுகாப்பு கருதி அரசாங்கம் தொண்டு தொழிலாளர்களை விடு அதனை அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்தி சபைகளின் மீது திணித்ததன் மூலம் அரசு அவிழ்த்து விட்டது.

நீதி கேட்டு குற்றத்திற்காக மக்களின் வீடுகள், கடைகள், தீயிடப்பட்டு, பலர் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். சில பாலியல் வல்லுறவுகளும் இந்தச் சாட்டில் நடந்தேறியுள்ளது.

இன்னும் இந்தப் படுகொலைகள் தொடர்பான விசாரணைக்கு உதவக்கூடிய பல தடயங்கள் முகாம் பகுதியில் காணப்பட்டபோதும் இவை எவற்றையும் கவனத்தில் எடுக்க பொலிஸ் தயாராக முன்வரவில்லை எனவும் இம்மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

அவரின் நீதிமன்று விசாரணைகளிலும், கொலைக்கும் பயன் படுத்தப்பட்ட தருதி பழந்த இரும்புக் கம்பிகள் மற்றும் சட்டைகளும்

அடுத்த நாளைக்கு பொலிசார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும் இவர்களை குற்றம் சாட்டியுள்ளனர்

இவை குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சிகளாகுமே? குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொலிஸ் ஏன் அவர்களைக் காப்பாற்ற முனைகிறது? சட்டத்துறையும் தமது கடமைக்கும் முரணாக இவ்வாறு செயல்படும் துணிவு இவர்களுக்கு எப்படி வந்தது?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் உண்மையான குற்றவாளிகளைத் தெளிவாக இனங் காட்டுகின்றன அல்லவா?

இந்த உண்மை பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்கும் எமது அரசியல்வாதிகளுக்கு உரைக்காதது ஏன்? தமது பதவிகளைக் காப்பதற்காக. இத்தனைக்கும் பின்னரும் மௌனம் சாதிக்கும் இவர்கள் தமிழர்களா?

தற் போது பிரதேசவாதவெறியில் படுகாயமுற்று உயிர்த்துடிதுடிப்பவர்களுக்கும், காயங்களுக்கும் மருந்து வேண்டி சிகிச்சையளித்துக் காப்பாற்றி வருகின்றது. குற்றவாளிகளை தப்பிக்க விட்டுவிட்டு பாதிக்கப்பட்டவர்களை கைது செய்து வைத்திருக்கிறது எமது அரசு. இவர்களைச் சென்ற பார்வையிடும் அனுமதிகூட மறுக்கப்பட்டிருக்கிறது.

குறைந்த பட்சம் இதனைத் தட்டிக் கேட்பதற்கு கூட அரசுக்கு முண்டுகொடுக்கும் எமது தமிழ்த் தலைவர்களால் முடியவில்லை. இந்த இளைஞர்களுக்கு அரசு வழங்கிய இத்தகைய பரிசுப்பை வைத்தான் முழுத்தமிழினத்துக்கும் வழங்க இவர்கள் உத்தேசித்துள்ளனர் போலும்.

இருள் சூழ்ந்த கிராமம்

(மண்முனைப்பற்று நிருபர்)

மட்டக்களப்பு நகரத்தில் இருந்து சுமார் 11 கி.மீ.தூரம் உள்ளது இப்புதுக்குடியிருப்பு கிராமம். இக்கிராமத்தில் உள்ள மின் கம்பங்களில் மின் குமிழ்கள் இல்லை. இதனால் இராக்காலங்களில் இருண்ட ஒரு உலகமாக இக்கிராமம் காட்சியளிக்கின்றது. இதனால் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றன.

மது உற்பத்திப் பாவனையை நீக்க கிராமியக் குழுக்கள் தெரிவு

(மூதூர் நிருபர் அனஸ்)

சட்ட விரோத மது உற்பத்தி, விற்பனை, பாவனை, கள்ளவாற்றுக்கெதிரான கிராமியக் குழுக்களின் இம் முயற்சி போற்றுதலுக்குரியது. இந்தப் பாவனையினை அதிகாரிகளினால் பொறுப்பவர்களும் மட்டுமன்றி சிறியவர்களும் இப்பழக்கங்களுக்கு அடிமையாகி வருகின்றனர். இதனால் சமூகம் சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் மூதூர் பிரதேச செயலாளர் ஏ.நடராஜா.

அண்மையில் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் அபிவிருத்தி அகத்தின் வழிகாட்டியில் அதன் இணைப்பாளர் பொ.சச்சிவானந்தம் தலைமையில் சட்ட விரோத மது உற்பத்தி, விற்பனை, பாவனைக்கெதிராக குழுக்களின் அங்குரார்ப்பணக் கூட்டம் மூதூர் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய பிரதேச செயலாளர் இன்று குறைந்த வருமானம் பெறுபவர்களும் விளக்க மின்மையால் இதனைப் பாவித்து பொருளாதாரத்தை வளமாக்கின்றனர். இத்தகையை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே முதற் பணியாக இருத்த வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

இவ் வைபவத்தில் மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.அப்துல் வஹாப், மூதூர் பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.ஏ.எம்.சுக்ரி, மூதூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஜே.குசைன்தீன் ஆகியோரும் கலந்து கொண்டு இக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினார்.

கிராமசேவை உத்தியோகஸ்தர்கள், சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், மற்றும் இளைஞர்கள் பலரும் பெருமளவில் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கிராமியக் குழுக்கள் பலவும் அமைக்கப்பட்டன.

சாய்ந்தமருதில் சாரணர் பாசறை

(முபா)

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் 3நாள் சாரணர் பயிற்சிப் பாசறை ஒன்று கடந்த வாரம் அதி வேலாகலமாக இடம் பெற்றது.

இதில் 18 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 200 சாரணர்களும், 25 சாரணியத் தலைவர்களும் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா வினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பாசறையில் மாவட்ட ஆணையாளர் இஸ்மதீன், சவூதி அரேபிய சாரணியத் தலைவர் டாக்டர் அப்துல் வஹாப்டீன், அதிபர் யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோர் உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இப்பாசறையில் பல முகாம்களும் இலிலாவுடன் வித்தியாலயம் அதிக புள்ளிகளைப் பெற்று சிறந்த குழுவாக தெரிவு செய்யப்பட்டதோடு மிலேனியம் சாரணர் விருதையும் பெற்றுக் கொண்டது. பாசறையின் முடிவில் பாசறைத்தீ எனும் ஜம்பெழுத்துச் சங்கிலிகை ஒன்று கொளுவிப் பிரியப்பட்டது.

ஐக்கிய இளைஞர் பேரவையின் புதிய நிர்வாகிகள்

(மருதமுனை ஹரீஷா)

மருதமுனை ஐக்கிய இளைஞர் பேரவையின் பொதுக் கூட்டம் சமீபத்தில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி பதியுதீன் மஹ்மூத் மண்டபத்தில் நடை பெற்றது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஐ.எம்.வலீத் தலைமையில் இக் கூட்டம் நடை பெற்ற போது நடப்பு வருட நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் :-எம்.ஐ.எம். வலீத், பிரதித் தலைவர் :- எம்.எச்.எம்.நஸீம், பொதுச் செயலாளர் :- ஏ.ஜீ.எம்.ஜிஹான், நிருவாகச் செயலாளர்:- எம்.கபீர் பொருளாளர்:-ஏ.சி.எம்.றாபி, தலைவர்:-எம்.எஸ்.ஹமாறூர், பிரதித்தலைவர்-எம்.எல்.எம். ஹலீஸ், நிருவாகப் பணிப்பாளர்:- எம்.எல்.எம்.முதர்ரிஸ், நிதிச்செயலாளர்:- எம்.எல்.உவைசுல் கலீம், கணக்காளர் :- எஸ்.ஐ.எம். எஸ்.தெளபீக் மௌலானா, அமைப்பாளர்:- எம்.எஸ்.அலீஸ், இணைப்பாளர்:- பீ.எம்.எம்.பஹீஸ், சட்ட ஆலோசகர்:- எம்.எச்.எம். வாஸ்லா, நிருவாக உறுப்பினர்கள்:- பீ.எம்.எம்.நுவாஸ், ஏ.எப்.றபாயில், எம்.எல்.எம்.மாஹிர்.

அக்கரைப்பற்றில் மோதல்: இரு புலிகள் சுட்டுக்கொலை

(நமது நிருபர் ஐ.பா)

அக்கரைப்பற்று சின்னத் தோட்டத்தில்விசேட அதரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களிடமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். கொல்லப்பட்ட இரண்டு விடுதலைப் புலிகளின் சடலங்களும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடியில் டெங்குக் காய்ச்சல் மிக வேகமாக பரவி வருகிறது. இதுவரை ஒருவர் மரண மடைந்தும், இருவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டும் உள்ளனர். இதனால் காத்தான்குடி நகர சபையும் காத்தான்குடிசுகாதார வைத்திய அதிகாரியின் அலுவல கமும் இணைந்து பல் டெங்கு ஒழிப்பு திட்டங்களைமேற் கொண்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பாடசாலைச் சுற்றுப்புறச் சூழல்அதிபர், ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் சுத்தப்படுத்தப் பட்டு வருகின்றன.

விடுமுறைக்கு முன்னரே பாடப்புத்தகங்கள் வழங்க முயற்சி

(ஏ.எல்.மாஹிர் நிருபர்)

புதிய வருடத்தில் பாடசாலை மாணவர்கள் புதிய வகுப்புகளுக்கு சமூகமளிக்கும் போது எவ்வித தடங்களுமின்றி முதல் வாரத்திலேயே தமது பாடவிதானங்களை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு வருடத்திலும் புதிய பாடப்புத்தகங்கள் உரிய பாடசாலைகளைச் சென்றடைய தாமதமாவதால், பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை வீண் தாமதங்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இவைகளை கருத்திற் கொண்ட கல்வி அமைச்சு, உரிய காலத்திற்குள் பாடப்புத்தகங்களை உரிய சகல பாடசாலைகளுக்கும் கிடைக்க கூடியதாக தற்போது பிரதேசகல்வி அலுவலகங்களுக்கு நேர காலத்தோடே அனுப்பி வைத்துள்ளது.

இம்மாத இறுதியில் சகல முஸ்லீம் பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக மூடப்பட விருக்கும் அதே வேளை அடுத்த மாத முதல் வாரத்தில் ஏனைய பாடசாலைகளுக்கும் **விடுமுறை வழங்கப்படவிருக்கின்றது.**

இதனால் இவ்விடு முறைகளுக்குமுன்பாக மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் யாவும் வழங்கப்பட விருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை வருடாந்த நேரசூசித் திட்டமும் அடுத்த ஆண்டு முதல் அமுல்படுத் தப்பட விருக்கின்றது.

வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் நலன்களைப் பேணும் நோக்கில் மாணவர் ஒன்றியம்அண்மையில் இணைப்பாளர் அ.கி.பிரான்சிஸ் தலைமையில் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர்:-உ.நித்திரி மூர்த்தி, உப தலைவர்கள் திருமதி சி.பரிமளவாணி, கி.அருட் சிவா, செயலாளர் க.கேசவராஜன், உபசெயலாளர்கள் ரி.தமிழ்வாணன், செ.ஆனந்தி, பொருளாளர் மா. செல்வமலர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சோ. தயலோஜினி, ஈ.விஜிபிறிடா, இ.சுதாஸ்கரன், அ.நிலேந்திரிகா, க.சசிதரன், எம்.மதீனா ஆலோசனைக் குழுவினராக விரிவுரையாளர்கள் கே.திலகநாதன், எஸ். தேவராஜ், எஸ்.விஜயநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகள்

(மருதமுனை ஹரீஷா)

மருதமுனை கோல்டன் இளைஞர் கழகத்தின் விஷேட பொதுக் கூட்டம் சமீபத்தில் மருதமுனை அல்-மனார் மத்தியகல்லூரியில் நடை பெற்றது. எம்.ஐ.எம்.வலீத் தலைமையில் இவ்விஷேட கூட்டம் நடை பெற்ற போது பின்வருவோர் புதிய நிருவாகிகளாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்:-எம்.ஐ.எம். ஜஹாங்கீர், செயலாளர்:- எம்.ஐ.எம். வலீத், பொருளாளர்:- எம்.இஸட்.எம். றியாஸ், பிரதித் தலைவர்கள்:- ஏ.எம்.ஏ.லத்தீப், எஸ்.எச்.நூபியா, எம்.நைறோஸ்கான், எம்.ஏ-சி.ஹரீசா, அமைப்பாளர் எம்-எம்-ஜெஸ்பி, கணக்காளர் எம்-ஏ-ஏ-அக்ரம், பிரிவுச் செயலாளர்கள், ஏ.எம். ஜெஸீல், எம்.ஜீ.எம்.நாபிஉ, எம். எல்.ஏ.முஜீப், பீ.எப்.டீ.சமான், நிருவாக உறுப்பினர்கள்:- எம்.ஐ. எம்.மூஸப்பாய், எஸ்.எம்.றஸ்வி, ஏ.எஸ்.எம்.றாஜி, ஏ.எல்.எம்.ஹஸாம், எம்.ஐ.எம்.இர்பான், ஏ.எம்.இர்பான்.

பத்திரிகையாளர்களுக்கு பாராட்டு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கம் கடந்த காலங்களில் பத்திரிகைத் துறையில் சிறந்த சேவையாற்றிய ஐ.எல்.எம்.றிஸ்வான், ஏ.எம்.அலிக்கான் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கப்பட வுள்ளதாக அம் பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத் தலைவர் மீரா.எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

பத்திரிகைத் துறையில் சிறந்த சேவையாற்றிய இவர்களை பாராட்டி கௌரவிக்கும் விழா இம் மாதம்பெதிகதி சூயபிற்றுக்கிழமை முற்பகல் அச்சுகரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடாத்தப்படவுள் ளதாகவும் இவ் விழாவிற்கு பிரதம அதிதியாகபராளுமன்ற உறுப் பினரும்கல்விப்பிரதி அமைச் சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் இன்னும் பல முக்கிய பிரமுகர்களும்கலந்து பத்திரிகை யாளர்களைபாராட்டி கௌரவிக்க வுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாணவர் பயன் பெற்ற விஞ்ஞானக் கண்காட்சி

(மூதூர் நிருபர் அனஸ்)

விஞ்ஞானக் கண்காட்சி யினால் கடந்த ஒரு வாரகாலமாக களை கட்டியிருந்தது மூதூர் மத்திய கல்லூரி, பார்வையிட வந்த மாணவர் வெள்ளத்தால் நிரைறந்து வழிந்த இந்தக் கண்காட்சியை மூதூர் தேசிய பாடசாலை உயர்தர விஞ்ஞான ஒன்றிய மாணவர்கள்ஒழுங்கு செய்திருந்தனர்.

கடந்த 6ம் திகதி முதல் 5 நாட்கள் தொடர்ந்து நடை பெற்ற இந்த விஞ்ஞானக் கண்காட்சியை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.திரவியராஜா, ஆரம்பித்து வைத்தார்.

இக் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர்களின் ஒப்பிலா மணி சந்திரகலா, பாத்திமா ஜெனீரா, ஏ.டபிள்யூ.மாஹிர், எஸ்.ஏ.எம்.ஜிப்ரி ஆகியோரின் வழி காட்டலில் உயர்தர விஞ்ஞான மாணவர்களின் பெருமுயற்சியின் வெற்றியே இதுவென கல்லூரி அதிபர் என்.எம்.நஜ்முத்தீன் தெரிவித்தார்.

தரம் 4முதல்13 வரை யான அனைத்து மாணவர்களுக்கு பயனளிக்கும் விதத்தில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பப் பாடங்களுடன் தொடர்புபடுதாக ஆக்கிஅளிக்கப்பட்ட இப்பொருட் காட்சிக்கான பொருட்கள் ரூபா பத்தாயிரம் மற்றும் பொருட் செலவுடன் ஆக்கப்பட்டதாகவும், மூதூர் கல்விப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் கண்டுகழித்தமை தமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருவதாகவும், விஞ்ஞானப்பிரிவு மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

விழிப்புணர்வுப் பிரச்சாரம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு வாழ்வியல் மேம்பாட்டுக் கழகம் தற்போது நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்கு காச்சல் தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து தாண்டவன்வெளிகிராம அபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையுடன் திருப்பெருந் துறை, உளுறணி, கருவேப்பங்கேணி, பூம்புகார், புதியநகர் பிரதேசங்களில் இம்மாதம் 13ம்,14ம் திகதிகளில் செயற்படுத்துகின்றது.

கல்விக் கல்லூரி வெளிவாரிப் பரீட்சை

(முபா)

அட்டாளச்சேனை தேசிய கல்விக் கல்லூரி இரண்டாம்வருட பயிற்சி ஆசிரியர்களுக்கான வெளிவாரி இறுதிப் பரீட்சை எதிர்வரும் 27ம் திகதி தொடக்கம் டிசம்பர் 2ம் திகதி வரை இடம் பெறவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இக்கல்விக் கல்லூரியைச் சேர்ந்த 99 ஆசிரியர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவர். பரீட்சை முடிந்ததும் இவர்கள் கட்டுருப் பரீட்சைக்காக கல்முனைக் கல்விப் பிரதேச பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.

வெள்ள அபாயம்!

விவசாயிகள் கவலை.

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழையால் சவளக்கடை, 4ஆம் கிராமம், மத்தியமுகாம், போன்ற பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்களில் அனேகமானவை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குளம்போல் காட்சியளிக்கும் அப்பகுதி வயல் நிலங்களில் தேங்கியுள்ள நீர் எங்கும் ஓட முடியாதவாறு நின்று விதைப்புநடைபெற்ற பகுதிகளிலுள்ள வயல் நிலங்களில் காணப்படும் நெற்பயிர்கள் அழுகி அழியும்நிலை தோன்றியுள்ளதாகவும் ஏனைய பகுதி வயல் நிலங்கள் விதைப்பு வேலைகளைத் தொடர்ந்துமேற்கொள்ள முடியாத வாறு காணப்படுவ தாகவும், இந்நிலை மேலும் தொடர்ந்தால் பெரும் போக (காலபோக) வேளாண்மைச் செய்கையில் ஈடுப. முடியாது போய்விடுமெனவும் விவசாயிகள் கவலையடை கின்றனர்.

மக்கள் தேடிவரும் தலைவர்களாக அல்ல, மக்களைத் தேடிச் செல்லும் சேவகர்களாக.....

07.11.2000 அன்று கிரானில் கொல்லப்பட்டது பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சவுந்தர நாயகம் மட்டுமல்ல. தமிழினத்தின் ஜனநாயகக் குரல் வளை ஒன்றும் நசுக்கப்பட்டு விட்டது. தேர்தல் காலத்திலே மக்களிடம் வாக்குறுதிகளை அள்ளி வீசி வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெயரை தமது பெயரின் முன்பாக சேர்த்துக் கொண்டு, அதிசிறந்த சக்தியான மக்கள் சக்தியைக் குறிக்கும், " கௌரவ " எனும் அடைமொழிக்கு உரித்துடையவர்களாக தம்மைக் காட்டிக் கொண்டு, மெய்ப்பாதுகாவலருடன் நடமாடும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே அமரர் நிமலன் சவுந்தரநாயகம் அவர்கள் முற்றிலும் மாறுபட்ட மக்கள் சேவகனாக மக்களுடன் தனது காலத்தை கழிக்கத் தொடங்கி இருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் ஈன்றெடுத்த மற்றுமொரு மக்கள் சேவகனாக மிளிர எத்தனிக்கும் போதே நிமலன் சவுந்தர நாயகம் அவர்கள், தமிழினத்தின் பெயரைத் தம் பெயரோடு இணைத்துக் கொண்டு, தமிழினத்தின் விடுதலைக்கான போராளிகளாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் இன்றைய பாதுகாப்புப் படையினரின் கைக் கூலிகளாக உள்ள விரோத தமிழ்க் கட்சிகளினால் படுகொலை செய்யப்பட்டார். திரை மறைவில் பேரினவாதிகளிடம் தமிழினத்தை விலை பேசும் தமிழ் கட்சிகட்கு எதிர் காலத்திலே நிமலன் சவுந்தரநாயகம் அவர்கள் பெரும் சாவாலா அமைவார் என்பதை அந்த தமிழ்க் கட்சிகள் தெளிவாக நாடி பிடித்தறிந்து விட்டன..

மக்களிடம் செல்வதற்கு தன்னிடம் சகல வாகன வசதிகள் இருந்தும் அவற்றின் மூலம் மக்களின் மூலை முடுக்குகள் எல்லாம் சென்று அவர்களின் குறைகளை துடைக்க முடியாது என்பதை உணர்த்த அமரர் நிமலன் சவுந்தர நாயகம் அவர்கள் மோட்டார் சைக்கிளையே தனது போக்குவரத்து சாதனமாக பயன்படுத்தினார். இதனால் தமிழ் மக்களின் தலைவனாக மக்களின்மடியிலே மரித்துள்ளார்.

இந்த நிலையிலே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் முடிவுகளை அவதானித்தல் பொருத்தமானது. 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 74.000 வாக்குகளை பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணி மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆனால் இம்முறை கிட்டத்தட்ட 54.000 வாக்குகளைப் பெற்று தன் ஒரு ஆசனத்தை இழந்து இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது. தமிழரின் நாயகமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்டையாகவும் விளங்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏன் இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும்படியான வீழ்ச்சியைக் கண்டது? இக் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

1994ம் ஆண்டு பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட இவர்கள், நகர புறங்களிலே குடியேறி விட்டனர். கிராமப்புற மக்களின் பெருவாரியான வாக்குகளை பெற்ற இவர்கள் அம்மக்களை மறக்கத் தொடங்கினர். நகரத்திலே தமது அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டனர். நகர பாடசாலைகளை புனரமைக்கும் பணிகளிலே பெருவாரியாக ஈடுபட்டனர். தமது சொந்த கிராமங்களிலே வீதி முதல் சகல அபிவிருத்திகளையும் மேற் கொண்டனர். சாராய பார்கள் திறப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் அனுமதிகள் வழங்கினர். வெளிநாட்டுத் தமிழர் மீது இழைக்கப்படும் கொடுமைகளை தெளிவுபடுத்தச் சென்றவர்கள் அங்கு சந்தையிலே நுகர்வோராக அலைந்தனர். நாள்தோறும் படையினரின் அட்டகாசங்கள், முறையற்ற கைதுகள், படுகொலைகள், மாணவர் கொலைகள், கண் மூடித்தனமான எறிகணை வீச்சுக்கள், போன்றவற்றுக்கு முகம் கொடுத்து தமது அவல நிலை துடைக்க யார் வருவார் என ஏங்கிக் கிடந்த கிராமத்து மக்களைக் கடைக்கண்ணால் கூட எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் திரும்பிப் பார்த்ததில்லை. தந்தையை இழந்து, மகனை இழந்து, தம்பியை இழந்து கணவனை இழந்து, நின்ற கிராமப்புற மக்களுக்கு வந்த ஆறுதல் வார்த்தையோ, உதவிகளையோ, புரிந்தது இல்லை. கிராமப் புறங்களிலே ஓலைகளால் வேயப்பட்டு காற்றுக் காலங்களில் ஓலைகளும் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு வெறும் கம்புகள் மட்டும் எஞ்சியிருந்த பாடசாலைகளுக்கு ஓலைகளைக் கூட அன்பளிப்பு செய்ய முன்வரவில்லை. அதற்குரிய மாற்று நடவடிக்கைகளை எடுக்கவும் இல்லை.

இருப்பினும் தமிழர்களின் போராட்ட கோட்பாடுகளை பாறாங் கல்லான அவசரகாலச் சட்டத்தையும் தமிழர்களின் ஜனநாயக ரீதியிலான உரிமைகளையும் மீறும் முகமாக அமைந்த தீர்வுத் திட்டத்தையும் எதிர்த்து வாக்களித்ததுடன் மட்டும் நின்று விட்டனர். இது உண்மையில் தமிழர்களுக்கு தமிழர் விடுதலை கூட்டணி செய்த மிகப் பெரிய சேவைதான். அதனால் தான் இன்றும் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்திருக்கின்றனர். இருப்பினும் மக்கள் பெரும் சீற்றம் கொண்டுள்ளனர் என்பதையும் அண்மைய தேர்தல் முடிவு கூட்டிக் காட்டத் தவறவில்லை. அதிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரைக் கூட மக்கள் வெறுத்து புதிய பிரதிநிதி ஒருவரையும் தெரிவு செய்திருந்தனர்.

தமிழ் மக்கள் நீண்ட காலத்திற்கு பின் தமிழர்களின் தலைவனாக மக்கள் சேவகன் ஒருவரை தெளிவாக இனம் கண்டு தெரிவு செய்திருந்தனர். அவர்தான் மறைந்த நிமலன் சவுந்தரநாயகம் அவர்கள். மறைந்த நிமலன் சவுந்தரநாயகம் அவர்கள் ஈழப் போராட்டம் தொடங்கும் முன்பு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிகளை எதிர்த்து ஆயுதமேந்தி கிழக்கின் முதல் தமிழ் மகன் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இத் தகைய ஒரு தமிழனை தொடர்ந்தும் விட்டு வைத்திருந்தால் எதிர் காலத்தில் தமது கட்சி இல்லாது மறைந்து விடும் என்பதை நன்கறிந்த தமிழ் கட்சிகள் அவரை படுகொலை செய்து விட்டன.

இந்த நிலையிலே தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவருடைய இடத்திற்கு மறைந்த நிமலன் சவுந்தர நாயகம் அவர்களின் மனைவியை நியமிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது நிறைவேறாத பட்சத்தில் புதிதாக தெரிவு செய்யப்படும் பிரதிநிதியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரு எம்பிக்களும் மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் மக்கள் எதிர்பார்ப்பவற்றையும் குறிப்பிட வேண்டும்.

இன்றைய நிலையிலே மட்டு மாவட்டத்தில் இருந்து ஏனைய கட்சிகள் சார்பாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்காக சேவை செய்வதில் தம்மைச் சமர்ப்பித்துள்ளனர். மக்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை தட்டிக் கேட்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல வழிகளிலும் இன, மத, பேதமின்றி உதவி வருகின்றனர்.

இவர்களுடைய இத்தகைய சேவையையும் அந்த எம்.பி.க்களையும் பாராட்ட வேண்டும். அவர்களின் சேவைகள் மட்டு மாவட்டத்தின் தமிழ் பேசும் பிரஜை ஒவ்வொருவருக்கும் தேவையானது. இருப்பினும் இவர்கள் பங்கேற்கும் கட்சிகளில் நிலை எம்.பி.க்களை சுயாதீனமாக மக்கள் ஆணைப்படி செயற்பட முடியாத நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. அபிவிருத்திப் பணிகளை மட்டுமே இவர்களால் முன்னெடுக்க முடியும். உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடியாது. இந்த எம்.பி.க்களினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் கூட பாதுகாப்புப் படையின் கொடூர தாக்குதல்களால் சிதையும் நிலை இருக்கிறது. எனவே அதுவும் நிலையில்லாதது.

ஆகையால் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே மட்டு மாவட்டத்தில் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வுக்காக குரல் கொடுக்க முடியும். காரணம் அக்கட்சி மட்டுமே சுயாதீனமாகத் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் எதிர்காலத்தில் மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களாக திகழவிருக்கும் இரு பிரதிநிதிகளும் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அறிக்கை விடுவதுடன் பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதுடனும் மட்டும் நின்று விடாமல் பாதிக்கப்பட்ட மக்களை நேரிலே சந்தித்து உதவிகள் செய்யவேண்டும். கிராமப் புறத்திலுள்ள தகுதி வாய்ந்த இளைஞர் கூட்டும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். நடந்து கொள்வதற்கு கூட முடியாத நிலையிலுள்ள பாதைகளை புனரமைக்க வேண்டும். மொத்தத்தில் இவர்கள் நகர மக்களுக்கு மட்டும் உரிய எம்.பி.க்களாக இல்லாது, கிராமத்து மக்களினதும் எம்பிக்களாக இருக்க வேண்டும். இதுதான் மட்டக்களப்பு மக்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி செய்ய வேண்டிய சேவை. இவற்றை அறிந்து கூட்டணி செயற்பட்டு மக்கள் தேடி வரும் தலைவர்களாக இராது, மக்களைத் தேடிச் செல்லும் சேவகர்களாக இருந்தால் வரலாறு முழுவதும் கூட்டணி நிலைத்திருக்கும். இல்லையேல் அடுத்த தேர்தலுடன் மறைந்து விடும்.

கு. ஜகநீதன்

கருத்தரங்கு

இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

டெங்கு காய்ச்சல் அறிகுறிகளும், தடுப்பு முறைகளும்

டெங்கு காய்ச்சல் ஒரு வகை "வைரஸ்" கிருமியால் ஏற்படும் நோயாகும். இந்த வைரஸ் கிருமிகளை காவுகின்ற "ஈடிஸ் ஈஜிப்பாடி, ஈடிஸ் அல்போபிக்டஸ்" எனும் நுளம்புகள் ஒரு சுகதேகியை கடிக்கும் போது அவருக்கு இந்த நோய் வரலாம். இந்த நோய் மூன்று உக்கிர நிலைகளைக் கொண்டதாகும். நோய் அறிகுறிகள் உக்கிர நிலைக்கு ஏற்றவாறு காணப்படும்.

01. சாதாரண டெங்கு காய்ச்சலும், நோய் அறிகுறிகளும் :-

- ▲ கடும் காய்ச்சலும்,
- ▲ தலைவலி,
- ▲ வாந்தி,
- ▲ உடல்வலி,
- ▲ வயிற்றுளைச்சல்

மூன்று, நான்கு தினங்களில் இந்த நோய் அறிகுறிகளும் குறைந்து நோய் குணமாகலாம். எனினும் இவருக்கு இரண்டாவது நிலையான இரத்தப் பெருக்குடனான டெங்குக் காய்ச்சல் **(DENGUE HEMORRHAGIE FEVER)** ஏற்படலாம்

02. இரத்தப் போக்குடனான டெங்குக் காய்ச்சலும், நோய் அறிகுறிகளும்:-

- ▲ உக்கிரமான காய்ச்சல்,
- ▲ கண்கள் சிவப்பு நிறமாகுதல்,
- ▲ மூக்கினால் இரத்தம் கொட்டுதல் (சிவப்பு) அடையாளங்கள்)
- ▲ தோலின் சிறிய இரத்தப் புள்ளிகள்
- ▲ மலத்தினூடாக இரத்தம் வெளியாகுதல்,
- ▲ வாந்தி அல்லது மலம் கறுப்பு அல்லது செம்பட்டை நிற மாகுதல்.

03. டெங்கு காய்ச்சலின் அபாய நிலையும், குணங்குறிகளும்:-

டெங்கு காய்ச்சல் திடீரென குறைந்து விடக் கூடும். இருந்தாலும் நோயாளி சுகயீனமாகத் தென்படுவதால் அது துக்ககரமான நிலையாகும். அப்படிப்பட்ட நோயாளியின்

- ▲ உடம்பு வெள்ளை நிறமாகுதல்
- ▲ குழப்பமான துக்கமான நிலை
- ▲ மூச்செடுத்தல் நாடி ஓட்டம் வேகமாகுதல்

போன்ற துக்ககரமான அடையாளங்கள் ஏற்படின் நோய் மிகப் பாதிப்புள்ளதாக தோன்றும். விஷேடமாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட ஒரு பிள்ளையின் காய்ச்சல் திடீரென குறையுமாயின் அவதானமாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். அஸ்பிரின் அல்லது டிஸ்பிரின் போன்ற மருந்துகளை வழங்கக் கூடாது. உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் வேண்டும்.

பொதுவாக அனைவரும் கவனிக்க வேண்டியவைகள்:-

இந்த நோய் மிகவும் கூடுதலாக பாதிக்கப்படக் கூடியவர்கள் சிறுவர்களே.

காய்ச்சல் ஏற்பட்டதும் கூடியளவு ஓய்வெடுத்தல் வேண்டும்.

அதிகமாக நீராகாரம் அருந்துதல் வேண்டும்.

அஸ்பிரின், டிஸ்பிரின் கலந்த மருந்துகளை தவிர்த்தல் வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் என சந்தேகம் ஏற்பட்டால் உடனே வைத்திய சாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் தடுப்பு முறைகள்:-

டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களிற்கு பூரண சிகிச்சை கிடையாது. உப சிகிச்சைகளே **(SUPPORTING TREATMENT)** உள்ளன. மேலும் இந்த டெங்கு வைரஸ் காய்ச்சலை பரப்புகின்ற நுளம்புகள் பகலிலும் மனிதனுக்கு கடிப்பதால் நுளம்பு வலைகளோ, நுளம்புச் சுருள்களோ பூரண உதவி செய்யாது. ஆதலால் இந்த நுளம்புகள் வாழும், பெருகும் இடங்களை இல்லாமல் செய்வதன் மூலமே பூரண பாதுகாப்பு பெற முடியும்.

வீட்டையும், வீட்டின் சுற்றுப் புறங்களையும், துப்பரவாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ளுதல்.

குப்பை கூழங்களை எரித்துவிடல் அல்லது புதைத்தல்.

குப்பைச் சிரட்டைக்குள் தண்ணீர் தேங்காமல் அதனை துண்டு துண்டாக வெட்டிவிடல்.

வெற்று தகரடப்பா, சிரட்டைகள், உடைந்த சட்டி, பானைத் துண்டுகள், வெற்றுப்-பால்-டின்கள் என்பவற்றை அகற்றிவிடல்.

பூச்சாடிகள், மீன் தொட்டிகள் என்பவற்றின் தண்ணீரை அடிக்கடி மாற்றுதல்.

வீட்டுக் கூரையிலும், சுற்றுப் புறங்களிலும் இருக்கும் பழைய டயர்களில் மண் நிரப்பி விடல்.

கூரைகளின் பீலிக்குள் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு அதற்குள் இருக்கும் குப்பை கூழங்களை அகற்றிவிடல்.

குறிப்பு:- "டெங்கு காய்ச்சல் பற்றிய ஆலோசனையைத் தந்துதவியவர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். ஜவ்பர்

தென் ஆபிரிக்கா பயணமாகும் இலங்கை அணி

(பிரகாஸ்)

இலங்கை அணியும் தென் ஆபிரிக்கா அணியும் நீண்ட இடை வெளிக்குப் பின்னர் மோதிக் கொள்ளவிருக்கின்றன. அதாவது எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் இப்போட்டிகள் நடை பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளுக்கும்மூன்றுடெஸ்ட் போட்டிகளும் 6 ஒரு நாள் சர்வதேச போட்டிகளும்இடம் பெறவிருக்கின்றன. சனத்ஜெயசூரிய தலைமையில் செல்லும் இலங்கை அணி வெற்றி பெற வாய்ப்புண்டு என கிரிக்கட் விளையாட்டு விமர்சகர்கள்கருத்து தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியானது மிகவும் விறுவிறுப்பை ஏற்படுத்தப்படும் போட்டியாக அமையும் என்பதே ஆயர்வாளர் கருத்து.

இதற்கு முன்பு 1998 இல் கடைசியாய் நடை பெற்ற டெஸ்ட் போட்டிகளின் போது தென் ஆபிரிக்கா அணி இலங்கை அணியை 2-என்று தோற்கடித்தது. அப்போட்டியின் போது நம்மவர் முத்தையா முரளிதரன் 16 டெஸ்ட் விக்கட்டுக்களை கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இது வரையில் இலங்கை அணிக்கும் தென் ஆபிரிக்கா அணிக்கும் 18டெஸ்ட் போட்டிகள் நடை பெற்றுள்ளன. அப்போட்டியில் 6போட்டிகள் இலங்கையிலும் இரண்டு போட்டிகள் தென் ஆபிரிக்காவிலும் நடை பெற்றன. 4டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று தென் ஆபிரிக்கா முன்னணியில் திகழ்கிறது. அதாவது கடந்த ஜூலை மாதத்தில் சர்வதேச காலி மைதானத்தில் இலங்கை தென் ஆபிரிக்கா அணிகள் மோதிக்கொண்டன. அப்போட்டியில் இலங்கை அணி தென் ஆபிரிக்கா அணியை 1 இனிங்ஸினாலும்15 ஓட்டங்களாலும் தோற்கடித்தது. அப்போட்டிகளின் போது,

சனத்ஜெயசூரிய 148ஓட்டங்களையும்,மகேல-148ஓட்டங்களையும்,சமிந்தவாஸ்-54ஓட்டங்களையும் சிறப்பாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நம்மவர் முத்தையா முரளிதரன் பந்து வீச்சு காரணமாக தென்ஆபிரிக்கா அணி தடுமாறியது. காலி மைதானத்தில் நடந்த போட்டியின் போது 171 ஓட்டங்களைக் கொடுத்து 13விக்கட்டை கைப்பற்றினார்.

அப்போட்டியின் இரண்டாவது தொடர் கண்டி அஸ்கெலிய மைதனத்தில் நடை பெற்றது.அப்போட்டி 1-1 என்று சமநிலையில் முடிவுற்றது.இது இவ்வாறு இருக்க தென்ஆபிரிக்காவுடன் விளையாடும் இலங்கை வீரர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:-

சனத்ஜெயசூரிய (கப்டன்), மாவன் அத்தப்பத்து, மகேல ஜெயவர்த்தன, அரவிந்த டி சில்வா, குமார் சங்கக்கார, ரசல் ஆனொல்ட், ருமேஸ் களுவித்தாரன, டில்சான் திலகரட்ன, சமிந்தவாஸ், நுவான் சொய்சா, முத்தையா முரளிதரன், ஆகியோர் இடம் பெறுகின்றனர். இப்போட்டியின் போது குமார் சங்கக்கார தனது திறமையை காட்டாவிட்டால் திலகரட்ன டில்சான் திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் பயணமாகும் இந்திய அணி

(பிரகாஸ்)

சார்ஜாவில் நடை பெற்ற கொக்கக்கோலாக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியிடம் மண் கௌவிய இந்திய அணி இம்மாதம் 14ம் திகதி டாக்கா மைதானத்தில் டெஸ்ட் போட்டிக்கு இந்திய அணியில் புதுமுக வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். இப்போட்டியில் பழைய வீரர்கள் சிலருக்கு வாய்ப்புக் கிடைத்ததாக இல்லை. ஜஹர்வல் சிறிநாத் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். புதிய வீரர்களான யுவராஜ்சிங், சஹிர் ஹான், முரளி கார்த்திக் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அணியின் பெயர் விபரம்:-

சௌரவ்கங்குலி (அணித் தலைவர்),சடகோபன் ரமேஷ், லக்ஸ்மன், ராகுப் ராவிட், சச்சின் டெண்டுல்கார், சிப் சுந்தரதாஸ், யுவராஜ் சிங்,சபாக் ஹரின்,(விக்கட் காப்பாளர்), ஜகவல் சிறிநாத், அஜித் அஹாக்கர், ஜோசி, முரளி கார்த்திக், சகிராண், வெங்கடேஸ் பிரசாத், ஆகியோர் இடம் பெறுகின்றனர்.இப்போட்டியில் வெற்றி வாயப்பு இந்திய அணிக்கே உள்ளதாய் கிறிக்கட் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

"விளையாட்டு ஒரு மனிதனை முழு நிறைவுள்ளவனாக்குகிறது"

(க.கிருபாகரன்)

கொட்டும் மழையின் மத்தியிலும் நீங்கள் இவ் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காட்டிய ஆர்வம் போற்றத்தக்கது.விளையாட்டின் மூலம் ஒரு மனிதன் முழு நிறைவுள்ளவனாகின்றான். எதிர்காலத்தில் நீங்கள் சிறந்த விளையாட்டு வீரர்களாகப் பரிணமித்துச் சர்வதேச அரங்கில் திறமையினைக் காட்டுவது திண்ணம் என உதைப்பந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காசுபதி.நடராசா குறிப்பிட்டார்.

கல்லடி-வேலூர் விபுலானந்தா விளையாட்டுக்கழகம் தனது நான்காவது ஆண்டு நிறைவை ஒட்டி நடாத்திய நொக்கவுட் முறையிலான அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

இப்போட்டி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விபுலானந்தா விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்

மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி எம்.ஆர்.ஜெஸானா இவ்வருடம்நடை பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று மருதமுனை மாணவிகளுள் முதல் மாணவியாக சித்தியடைந்துள்ளார்.

இவர் விலைக்கட்டுப் பாட்டு அதிகாரி முகமட் றஷீன், சித்தி சர்ஜானா தம்பதியரின் புதல்வியாவார்.

(தகவல்:-எம்.ஐ.எம்.வலீத்)

சொறிக்கல்முனை திருச் சிலுவை பாடசாலை மாணவன் அருளம்பலம்இந்துஜன் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் அருளம்பலம் செபமாலை மேரி ஆகியோரின் புதல்வனாவார்.

(தகவல்:- பீ.எம்.சுலோஜன்)

அண்மையில் நடை பெற்ற 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சென் மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த பேறியூஸ் அவுஸ்கோன் 163 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளார்.

இவர் கலிஸ்டஸ்-கமிலா தம்பதிகளின் செல்வப் புதல்வரும், ஹென்றிக் கிளடிஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

(தகவல்:- க.கிருபாகரன்)

வாசகர் நெஞ்சம்

மாணவர் வரவின்மை பற்றி தலைவர் விளக்கம் தருகிறார்

தங்களது 6ம் திகதியிட்ட பத்திரிகையில் 11ம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 500 மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்ற செய்தி சம்பந்தமாக மட்/புனித மிக்கேல் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களே ஒழுக்காற்று தீர்மானம் காரணமாக பெற்றோர்களுடன் வராத மாணவர்கள் மாத்திரம் திருப்பி அனுப்பப்பட்டனர். மீண்டும் பெற்றோர்களுடன் சமூகமளித்த மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.பாடசாலை மாணவர் சீர்திருத்தம் காரணமாகவும், மாணவர்களின் நன்மை கருதியும், ஏற்கனவே பெற்றோர் அளித்த அங்கீகாரத்துடனுமே இவை இடம் பெற்றது. பத்திரிகைச் செய்தியிலுள்ளது போல் எதுவும் இடம்பெறவில்லை.

இது சம்பந்தமாக 8-11-2000 அன்று பாடசாலை ஆசிரியர்கள் சங்கம் விசேடமாக கூடி ஆய்வு செய்து இவ் மறுப்பறிக்கையை பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியும் அவர்களுக்கு உள ஊக்கமளிக்குமுகமாகவும் பெற்றோர்களின் விழிப்புணர்வை வேண்டியும் வெளியிடுகின்றது.

சகோ.ஏ.ஜேம்ஸ் பீரிஸ்
தலைவர்
சென் /மைக்கல் கல்லூரி
மட்டக்களப்பு

குப்பை வீதி

மட்டக்களப்பு வன்னியார் வீதி முதலாம் குறுக்கில் குப்பைகள் நிலையாந்து காணப்படுகின்றன. நுளம்புகளும் தாராளமாக உள்ளன. அக்கம் பக்கங்களில் உள்ளவர்கள் எந்த வித பொறுப்புணர்ச்சியுமற்று குப்பை, கழிவுப் பொருட்களை வீதியில் எறிந்து விடுவதாலேயே இவ்வீதி குப்பைமயமாகக் காட்சியளிக்கிறது.

ஆகவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை சுத்தப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜ.கோபாலப்பிள்ளை
மட்டக்களப்பு

ஓய்வு பெறக் காத்திருக்கும் ஸ்டீவ்வோ

அவுஸ்திரேலிய கிறிக்கட் அணியின் தலைவர் ஸ்டீவ் வோ உலகக் கிண்ணப் போட்டியுடன் சர்வதேசகிறிக்கட் ஆட்டத்திலிருந்துஓய்வு பெறத்தீர்மானித்துள்ளார். 2003ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிறிக்கட் போட்டிகளுடன் இவர் ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார்.35 வயது ஸ்டீவோ சுவிஸ்லாந்தில் சுவிஸ்லாந்தில் பயிற்சி முகாமில் பங்கு பற்றிய போதே இவ்விடயம் பற்றித் தெரிவித்துள்ளார்.இது வரை ஸ்டீவோ 128 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 8373 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 299 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும் கலந்து கொண்ட வரும் அத்துடன் உலகில் மிக வெற்றிக்கரமான அணித்தலைவராகவும் ஸ்டீவ்வோ கருதப்பட்டுள்ளார். இன்னமும் ஓரே ஒரு போட்டியில் விளையாடினால் 300 போட்டிகளில் விளையாடிய பெருமையையும் இந்த ஸ்டீவ வோவே பெறுவார் என்பதில் ஐயம் இல்லை.

பரிசளிப்பு விழாவும் பாராட்டு வைபவமும்

(ஜெஸ்மி)

மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இவ்வாண்டு 5.ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும்,2000ம்,ஆண்டு பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களுக்கான பாராட்டுக் கௌரவிப்பு வைபவமும் மருதமுனை மக்கள் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் கலாநிதி.எச்.எல்.ஜமால்டீன் தலைமையில் இடம் பெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம அதிதியாக கல்வி,கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன், கௌரவ அதிதியாக முன்னாள் அட்டாளைச் சேனை கல்விக் கல்லூரி பீடாதிபதி ஏ.ஆர்.ஏ.அலீஸ், விசேட அதிதியாக காத்தான்குடி தேசியப்பாடசாலையின் அதிபர் எம்.எச்.காதர் இர்ஸாதும் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாலகர்கள் விளையாட்டு விழா

(நமது நிருபர்)

பாலர் பாடசாலைகளின் விளையாட்டுவிழாவொன்று எதிர்வரும் 17ம் திகதி சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

சாய்ந்தமருது அல் அமீன் சன சமூக நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்விளையாட்டுப் போட்டியில் சிறுவர்களின் வினோதவிளையாட்டுக்கள் பல இடம் பெறவுள்ளன. பாலகர்களின் உடற் பயிற்சிக் கண்காட்சியும் இடம் பெறும்.

ஆட்ட நிர்ணயக்காரர்கள் கைது

(பிரகாஸ்)

கிறிக்கட் ஆட்ட வீரர்கள் தொடர்பான பந்தயக்காரர்கள் சிலரை இந்தியப் பொலிசார் 31-10-2000அன்றுகைது செய்துள்ளார்கள். பந்தயக்காரர்கள் 13பேரும் இந்தியாவின் வடமாநிலமான உத்திரப்பிரதேசத்தில் வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதை அடுத்து அனைவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் அருள் குமார் ஊடாகவியலாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

உள்ளூர் பந்தயக் காரர்களுக்கு புது டில்லி மற்றும் பம்பாய்ப் பகுதியில் தொடர்புகள் இருப்பதாகவும் அங்கு உள்ளவர்கள் டுபாய் மற்றும் சாஜாவில் உள்ளவர்களுடன் தொடர்புகளைப் பேணிக் கொள்வதுடன் ஆட்ட நிர்ணயங்கள் திட்டமிடப்படுவதாகவும் பொலிஸ் அத்தியட்சர் அருள் குமார் மேலும் தெரிவித்தார்.

ஒளிக்கீற்றுகளாகத் தென்படும் சமாதானம் தீய சக்திகளை ஊடறுத்து வழிவகுக்கவேண்டும்

மட்டக்களப்பு அஞ்சல் தொலைத்தொடர்பு சங்கம் தீர்மானம், ஆவல்

"நாடு அதல பாதாளத்தை நோக்கி செல்லும் இவ்வேளை சமாதானம் என்ற ஒளிக்கீற்றுக்களும் தென்படாமல் இல்லை. அவை வெறும் பசப்புவார்த்தைகளில் தங்கியிராமல் அனைத்து தீய சக்திகளையும் ஊடறுத்து இந்நாட்டில் சமாதானம் தோன்ற வழிவகுக்கவேண்டும். என சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம்." என அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் 42வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் ஏகமனாதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் சங்கத்தலைவர் பீ. தம்பிராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தபால் தணைக்களம் கூடுதத்தாபன மயமாக்கல் நடவடிக்கைகளில் அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம் விழிப்பாகவும், அங்கத்தவர்கள் பாதிப்புறாவண்ணமும் இருப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தனியார்துறை செய்கின்றது

மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் என். ஜெயரத்தினம் இக்கூட்டத்தில் விதியாக கலந்து கொண்டு பகையில் தபால் தணைக்களம் தனியார்துறையுடன் போட்டிபோட வேண்டிருக்கிறது. பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்நேரத்தில் தபால் தணைக்கள ஊழியர்கள் வாடிக்கை யாளர்களுக்கு திருப்திகரமான சேவையை செய்கிறார்களா ? என்றும் கேட்கவேண்டியிருக்கிறது ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் நேரமும் பொன்னானது. கருமபீடத்திற்கு வரும் வாடிக்கை யாளர்களை இன்முகத்துடன் வரவேற்று துரிதமாக அவர்களுக்கு சேவை வழங்கப்படுகிறதா ? பொது மக்களுக்கு வரும் கடிதங்கள் உரியமுறையில் துரிதமாக கிடைக்க வழிசெய்யப்படுகின்றதா? இத்தகைய கேள்விகள் தபால் தணைக்கள ஊழியர்கள் முன் கேட்கப்படவேண்டியிருக்கிறது. ஏனெனில் இத்தகைய சேவைகளை தனியார்துறையினர் வாடிக்கை யாளர்கள் மகிழ்ச்சியடைய கூடிய விதத்தில் செய்கின்றனர்.

தாய்ச் சங்கத்துக்கு அக்கறையில்லை.

தொழிற்சங்கம் ஊழியர்களின் நலனை பாதுகாப்பதற்கு முக்கியமதான் ஆனால் அஞ்சல் தொலைத்தொடர்பு தாய்ச்சங்கம் பிராந்தியங்களில் இருக்கும் தனது அங்கத்தவர்களின் நலன்களில் அக்கறையற்ற விதத்தில் நடந்து கொள்கிறது. தாய்ச்சங்கம் மாவட்டங்கள் தோறும் இருக்கும். சங்க கிளை அங்கத்தவர் களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதில்லை. அவர்கள் தங்கள் நலன்களைத்தான் பார்க்கிறார்கள். கொழும்பில் அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் தலைமைக்காரியாலயம் எட்டுமாடியில் அமைக்கப்படும் என நிதி சேகரிக்கப்பட்டு பலவருடங்கள் கடந்துவிட்டன. பிராந்தியங்களில் இருந்து செல்லும் அங்கத்தவர்கள் தங்குவதற்கு அங்கு இடமளிக்கப்படும் என்றெல்லாம் அப்போது கூறப்பட்டது. ஆனால் அவைஎல்லாம் காற்றில் கலந்த வாக்குறுதிகள் ஆகிவிட்டன என்றார். இக்கூட்டத்தில் கிழக்கு பிராந்திய பிரதிதபால்மா அதிபர் க. பாலசுப்பிரமணியம், மட்டக்களப்பு பிரதம தபால்திபர் ஆர். சுந்தரலிங்கம், அஞ்சல் பயிற்சி கல்லூரி அதிபர் எஸ். சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

புதிய தலைவராக பீ. தம்பிராசா, செயலாளராக ஏ.சுகுமார் ஆகியோர் மீண்டும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

வாழைச்சேனைப் பகுதியில் படை–புலிகள் சிறுமோதல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பிற்கு வடக்கே வாழைச்சேனைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் 4 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். என்று ஊடகத் தகவல்நிலையம் தெரிவித்தது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியினை ஊடறுக்க முயன்ற புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற இம்மோதல் முப்பது நிமிடங்களுக்கு மேல் நீடித்ததாகவும் அது மேலும் தெரிவித்தது. இதில் காயமடைந்த இராணுவத்தினர் பொலநறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு டக்ளஸ் வாக்குறுதி

(மூதூர்)

தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக உலக வாங்கி அதிகாரிகளுடன் பேசி இதற்கான உகந்த முடிவினை எடுத்து நிரந்தர நியமனம் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்த உறுதியளித்துள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

தொண்டராசிரியர் சங்கச் செயலாளர் ஜெ. இதயநேசனும், அவரது குழுவினரும் ஈ.பி.டீ.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்தில் அமைச்சில் சந்தித்து உரையாடிய போது அமைச்சர் இந்த உறுதி மொழியை அளித்ததாக சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஈ.பி.டீ.பி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா, திருகோணலை மாவட்ட அமைப்பாளர் எஸ். புஸ்பராசா ஆகியோரும் உடன் இருந்தனர்.

மட்டக்களப்பு....

பாடலைகளும் மாணவர் வரவின்றி வெறிச்சோடிக்காணப்பட்டன. துக்கம் அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்கள் என்ற பெயரில் துண்டுபிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இராணுவமுகாமில் சூடுபட்ட சார்ஜன் பலி, மற்றொருவர் காயம் !

(நமது நிருபர்)

திருகோணமலை முராவெவ என்னும் இடத்தில் நேற்று முன்தினம் விமானப் படையினர் வீதிக் கண் காணிப்பில் ஈடுபட்டிருந்த போது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இதில் ஒரு விமானப்படையாளி கொல்லப்பட்டார்.

அதே நேரம் இன்னுமொரு சம்பவம் திருகோணமலை கியத்துட்டுவ இடத்தில் அமைந்துள்ள இராணுவமுகாமில் கடமையிலிருந்த இரண்டு அதிகாரிகளுக்கிடையில் ஏற்பட்ட வாய் தர்க்கத்தில் ஏற்பட்ட துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில் ஒரு இராணுவ சார்ஜன் கொல்லப்பட்டதுடன் மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அரைமணி நேரம் சூட்டுச்சத்தம்

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு நகரின் மாமங்கம் முகாம் மீது நடந்த தாக்குதலை தொடர்ந்து இராணுவத்தினர் பதிலுக்கு சுமார் அரைமணி நேரம் வேட்டுக்களைத் தீர்த்தனர். இச்சம்பவத்தில் எந்தத்தரப்பிற்கும் எவ்விதசேதமும் ஏற்படவில்லை.

இரு இளைஞர்கள்...

ஈச்சங்குளத்தைச் சேர்ந்த சபாரெட்ணம் செல்வநாயகம், யுனிற் 3, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த பால்ராஜா ரவிச்சந்திரன் ஆகியோர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் உடப்புக்குளத்தைச் சேர்ந்த கணேஸ் நவம் என்பவர் 20.10.2000 தொடக்கம் காணாமல் போயுள்ளதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருமலை வாலிபர் சாதனை

(திருமலை நிருபர்)

வெண்ணப்புவ பீரீஸ் மைதானத்தில் கடந்த 11,12ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை அமைச்சூர் மெய்வலுனர் சங்கம் நடத்திய கனிஷ்டப்பிரிவுப் போட்டியில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் தே. ராஜன் 15 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் புதிதாக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

23.6 செக்கன் என்றிருந்த பழைய சாதனையை 23.5 செக்கன் என்ற நேரத்தில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவருக்கு நேற்று திருகோணமலையில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் சாரதி படுகாயம் !

நேற்று மதியவேளையில் திருமலை மத்திய வீதியில் ஓட்டோச் சாரதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். சவாரி வந்த மூன்று புலனாய்வுப் பிரிவினரின் துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடித்ததின் காரணமாக இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தினால் இடுப்பில் பலத்த காயத்திற்குள்ளான பாபு என அழைக்கப்படும் இச்சாரதி உடனடியாக திருமலை பொது வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது இடுப்புபெலும்பு முறிந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

அரச ஊடகத் தகவல்கள்

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புலிகளின் பதுங்கு குழி ஒன்றையும் ஆயுதக்கிடங்கு ஒன்றையும் தகர்த்து அழித்தாகவும் அத்தாக்குதலின் போது குறைந்தது 5 புலி உறுப்பினர்களாவது உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நாகர்கோயில் பிரதேசத்தில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி ஒரு விடுதலைப் புலி உறுப்பினரை கொன்றுள்ளதோடு மற்றுமொரு உறுப்பினரை காயப்படுத்தியிருந்ததாக அது மேலும் தெரிவித்துள்ளது.

மேற்படி காயமடைந்த உறுப்பினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார். என விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பின் நிமித்தம் பலன் தரும் மரங்கள் அழிப்பு !

(திருமலை நிருபர்)

திருகோணமலை புல்மோட்டை வீதியில் சாம்பல் தீவு பாலம் தொட்டகம் நிலாவெளி வரையிலான பிரதேசங்களில் வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் புல்டோசர்களினால் துப்பரவு செய்கின்றனர். 1990 ம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறாத மக்களின் வீடுகள், மரங்கள் அடங்கலாக புல்டோசர்கள் கொண்டு இராணுவத்தினரால் துப்பரவு செய்யப்படுகிறது. படையினரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. படையினரின் இந்நடவடிக்கை காரணமாக பல பலன் தரும் மரங்கள் முற்றாக அழிக்கப்படுகிறது.

செட்டிகுளத்தில் ஒரு இராணுவம் பலி

பிறிதொரு சம்பவத்தில் வவுனியாவுக்கு தென்மேற்கு பகுதியில் செட்டிக்குளப் பிரதேசத்தில் முதலியார் குளத்திலுள்ள இராணுவ சோதனைச் சாவடியை விடுதலைப் புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டு மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.